விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 078 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 23 செவ்வாய்க்கிழமை (07.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## ஐ.நா தீர்மானம் இலங்கை நிராகரிப்பு
03 பக்கம் பார்க்க

## எரிபொருள் விலை குறைவடைய வாய்ப்பு
07 பக்கம் பார்க்க

## தேர்தலுக்கு நிதி ஒதுக்கினால் பொருளாதாரத்தில் சிக்கல் ஏற்படும்
### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்



(கொழும்பு)
தேர்தலுக்கு நிதி ஒதுக்கி செலவு செய்தால் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய சிக்கல் நிலை ஏற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடு பொருளாதார ரீதியில் சிக்கலான நிலைக்கு முகம் 11

# தேர்தல் நடைபெற வாய்ப்பில்லை
### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்

(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி திறைசேரியின் கைகளிலேயே உள்ளது எனத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழு, ஏப்ரல் நடுப்பகுதியில் வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்கு முன்னதாக தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்தார்.
(12ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை ரூ.100 வரை குறையும்
### வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)
பாண் உள்ளிட்ட வெதுப்பக உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்படுமே தவிர, அதிகரிக்க தயார் இல்லை எனவும், குறைந்தபட்சம் பாணின் விலையை 100 ரூபாய் வரை குறைக்க எதிர்பார்ப்பதாகவும் அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் 11

### கச்சாயில் கிணற்றிலிருந்து
## வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் பகுதியில் தனிமையில் இருந்த வயோதிபப் பெண் ஒருவர் நேற்றுத் திங்கட்கிழமை காலை வீட்டுக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 11

## இலங்கையை மீளக்கட்டியெழுப்ப இந்தியா ஒத்துழைக்க வேண்டும்
### இந்திய இராஜதந்திரியிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)
இலங்கையை மீளக்கட்டியெழுப்ப இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இந்தியாவின் முன்னணி இராஜதந்திரியிடம் எதிர்க்கட்சித் 11

## அந்நிய செலாவணிக்கு தட்டுப்பாடு இல்லை
### மத்திய வங்கி ஆளுநர்



(கொழும்பு)
நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கான அந்நியச் செலாவணிக்கு தற்போது தட்டுப்பாடு இல்லையென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி 11

### ஜனவரி மாதம்
## ஏற்றுமதியில் சாதனை

(கொழும்பு)
இந்த வருடம் ஜனவரி மாதத்தில் இலங்கை ஏற்றுமதியில் சாதனை படைத்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில், ஆயிரத்து ஒரு மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதியான 11

### ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு
## உணவுப் பொருட்களின் விலைகள் குறைவடைந்தன

(கொழும்பு)
சில அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மொத்த விலைகள் குறைந்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வலுவடைந்து வருவதையடுத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மொத்த விலை குறைந்துள்ளதாக அந்தச் சங்கத் 11

### தேர்தல் நடத்துவது தொடர்பில்
## தேர்தல் ஆணைக்குழுவில் இன்று கலந்துரையாடல்


(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது குறித்து இன்று காலை 10.30 மணிக்கு தேர்தல் திணைக்களத்தில் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

இந்த கலந்துரையாடலுக்கு நிதி அமைச்சின் செயலாளர் நாயகம் உட்பட அரச அதிகாரிகள் பலர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தலை நடத்து 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவில் நடராஜர் சிலை



ஆனையிறவு தட்டுவன்கொட்டியில் 26 அடி உயரமான நடராஜர் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபையினுடைய ஏற்பாட்டில் அமெரிக்க மற்றும் உள்ளூர் வர்த்தகர்களின் ஆதரவுடன் ஆனையிறவு தட்டுவன்கொட்டி சந்தியில் 26 அடி உயரமான நடராஜப் பெருமானின் சிலை நிறுவப்பட்டுள்ளது.

துரித கதியில் வேலைகள் நடைபெற்று நிறைவடைந்துள்ளன. நடராஜர் சிலை விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-7,104)

# நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

திவாலான நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். தேர்தலை நடத்தாமல், ஒத்திவைக்காமல் தந்திரங்களை பிரயோகித்த ஜனாதிபதிக்கு நீதிமன்றம் உரிய பதில்களை வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கத்திற்கு எந்த உரிமையும் இல்லை எனவும் அதனை அரசாங்கம் உடன் நடத்த வேண்டும் எனவும் எதிர்கட்சி தலைவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட சில தரப்பினர் தேர்தல் தொடர்பாக தொடர்ந்தும் மௌனம் காத்து வருவதாக எதிர்கட்சி தலைவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் எதிர்காலத்தில் தம்மை அர்ப்பணித்து செயற்படுவோம் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

திவாலான நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# மல்லாகத்தில் நகை திருட்டு சந்தேகநபர் விளக்க மறியல்

9 இலட்சம் ரூபா பெறுமதியான ஐந்தரைப் பவுண் தங்க நகையை திருடிய பெண் உட்பட இருவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

இது குறித்து மேலும் தெரிய வருகையில்,

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, நுணசை சிவன் கோவிலில் நேற்று முன்தினம் நடந்த உற்சவத்தில் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது. முச்சக்கர வண்டியில் வந்த மூவர் அடங்கிய கும்பலால் இந்த திருட்டு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் இந்த திருட்டு சம்பவம் குறித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்ட இளவாலை பொலிஸார் ஒரு பெண் (43) மற்றும் ஒரு ஆண் (வயது 26) ஆகியோரை கைது செய்துள்ளதுடன் ஒரு பெண் தலை மறைவாகியுள்ளார். கைதான இருவரும் திருகோணமலையைச்சேர்ந்தவர்கள் என அறிய முடிகிறது.

இதன்போது திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை பொலிஸார் நேற்றையதினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

# தேர்தலை பிற்போடுவது ரணிலின் பரம்பரை வழக்கம்

## உதய கம்மன்பில

(கொழும்பு)

தேர்தலை பிற்போடுவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரம்பரை வழக்கம் என்றும் எவ்வாறாயினும் தேர்தலை பிற்போட ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தேர்தல் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு கடுமையான தடை விதித்துள்ள நிலையில் உரிமையை வென்றெடுக்க போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் கூறியுள்ளார்.

மேலும் மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக் கூற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரத்தின் பின்னர் நாட்டில் தோற்றம் பெற்ற தமிழருக்கு எதிராக இனக் கலவரம், வன்முறை மற்றும் 30 வருடகால ஆயுத போராட்டம் ஆகியவற்றை ஐக்கிய தேசியக் கட்சியே ஆரம்பித்தது என குற்றம்சாட்டியுள்ளார். (ம-7)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி **ரஞ்சனா ஞானதாஸ்**
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர்**

## கதிரவேலு இராமசாமி

அவர்களின் இறப்புச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தோற்றம்** 1945.04.11
**மறைவு** 2023.03.06

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்*
**யா/புத்தகலட்டி சிறி விஷ்ணு வித்தியாலயம்**

(C-6112)


# திறைசேரி உத்தரவாதம் வழங்கினால் இரு நாட்களில் தேர்தலுக்கான வர்த்தமானி

தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு திறைசேரியினால் தேவையான உத்தரவாதம் இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படுமாயின், தேர்தலை நடத்துவதற்கான திகதி புதன் அல்லது வியாழன் அன்று வர்த்தமானியில் வெளியிடப்படும் என அறிய முடிகின்றது.

தேர்தல்கள் ஆணைக் குழு இன்று காலை தேர்தல் நாள் குறித்து முடிவு செய்வதற்காக திறைசேரி செயலாளர், அரசாங்க அச்சக அதிகாரி மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை சந்திக்க உள்ளது.

திறைசேரியினால் தேவையான உத்தரவாதம் வழங்கப்பட்டால் வர்த்தமானி வெளியிடப்பட்டு பின்னர் தேர்தல் வர்த்தமானி அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் வெளியிடப்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடைபெறும் என முதலில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்த போதிலும், நிதி உள்ளிட்ட பிரச்சினைகளினால் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறாது என அறிவிக்கப்பட்டது. (ம-7)

# அரசுக்கு எதிரான நடவடிக்கைக்கு தயாராகும் தொழிற்சங்க கூட்டமைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் புதிய வரி கொள்கைக்கு எதிரான நடவடிக்கை குறித்து ஆலோசிக்க இன்று செவ்வாய்க்கிழமை தீர்க்கமான கூட்டம் நடைபெறவுள்ளதாக தொழில் வல்லுநர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், துறைமுகங்கள், மின்சாரம், நீர் வழங்கல், வங்கிகள், பெற்றோலியம் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் உட்பட 40 தொழிற் சங்கங்கள் இந்த தொழிற் சங்க கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

அரசாங்கத்தின் அநீதியான வரிக் கொள்கைக்கு எதிராக குரல் கொடுக்கும் எதிர்க்கட்சிகளும், இந்தத் தீர்க்கமான கூட்டத்தில் பங்கேற்கவிருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)


# மரண அறிவித்தல்

**திருமதி கிறிஸ்ரியன் அருள்ராஜ் யூட்ஸ்அமலி சுபோதினி** (சுபோ)



*சென்யூட் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ரியன் அருள்ராஜ் யூட்ஸ் அமலி சுபோதினி அவர்கள் (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.*

*அன்னார் சேவியர் - மேரிபற்றிமா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சின்ராசா மற்றும் செல்லக்கிளி தம்பதியினரின் அன்பு மருமகளும் கிறிஸ்ரியன் அருள்ராஜின் அன்பு மனைவியும் நெகேமி, போல் ஸ்ரெபான் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்றவர்களான இராயப்பு - விக்டோரியா மற்றும் செல்லையா - மேரிமலர், ஆனந்தன் (கட்டட ஒப்பந்ததாரர்) - ராஜம் ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான அல்போன்ஸ் லிகோறி - பூபதி மற்றும் பிரான்சிஸ் சேவியர், அருட்பணி அன்ரன் ஜோர்ச் (பங்குத்தந்தை - பளை), நேசன் - றோகினி ஆகியோரின் மருமகளும் மஞ்சுளா, மோகன், வசந்தா, தேவராஜா, செல்வராஜா, அமல்ராஜ், விமல்ராஜ், நிமல்ராஜ் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் அனுஷா, றோகனா, சாளினி, சியாந்தினி, மயூரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.*

*அன்னாரின் பூதவுடல் இன்று 07.03.2023 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இளவாலை புனித யூதாததேயு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித யூதாததேயு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

*தொடர்பு:* **077 808 1142** (நேசன்)
**076 247 8245** (ஆனந்தன்)

(14811)

தகவல்: குடும்பத்தினர்
(சென்யூட், இளவாலை)

# கண்ணீர் அஞ்சலி



கடந்த 05.03.2023 அன்று இறைபதம் அடைந்த எமது பெறாமகள்

அமரர் திருமதி
**கிறிஸ்ரியன் அருள்ராஜ்**
**யூட்ஸ் அமலி சுபோதினி** (சுபோ)

அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.

**திரு. ஆனந்தன்** (சித்தப்பா)
**திருமதி ராஜம்** (சித்தி) குடும்பத்தினர்

(14812) **நல்லாயன் வீதி, இளவாலை**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தேர்தலை நடத்துமாறு கோரி இத்தாலியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு





(வத்திக்கான்)
இலங்கையில் தேர்தலை நடத்துமாறு கோரி இத்தாலியின் மிலானோ நகரில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கையர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்களும் பங்கேற்றிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## மூவின மக்களும் ஏற்கும் அரசியல் தீர்வை வருட இறுதிக்குள் வழங்க வேண்டும்

### அரசிடம் ராஜித வலியுறுத்து



(கொழும்பு)
காலத்தை இழுத்தடிக்காமல் மூவின மக்களும் ஏற்கும் அரசியல் தீர்வை இவ்வருடத்துக்குள் அரசு வழங்கியே தீர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தினார்.

தேர்தல் என்று கூறி அரசியல் தீர்வுக்கான சர்வ கட்சிப் பேச்சைப் புறக்கணிக்கவோ அல்லது அந்தப் பேச்சை ஒத்திவைக்கவோ முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டங்களில் நானும் பங்கேற்றேன். அரசியல் தீர்வு வேண்டும் என்பதில் அனைத்துக் கட்சியினரும் ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ளனர். இது வரவேற்கத்தக்கது.

ஆனால், அதிகாரப் பகிர்வு தொடர்பில்தான் ஒவ்வொரு கட்சியினரும் வெவ்வேறு நிலைப்பாடுகளில் உள்ளனர்.

ஜனாதிபதி கூறியது போல் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் முரண்பாடுகள் இல்லாத ஒருமித்த முடிவை எடுக்க வேண்டும்" என ராஜித தெரிவித்தார். (நி)

## ஐ.நா மனித உரிமை பேரவையின் தீர்மானம் மீண்டும் நிராகரித்தது இலங்கை

(கொழும்பு)

**ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை கடந்த வருடம் நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என இலங்கை மீண்டும் தெரிவித்துள்ளது.**


ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் 52 ஆவது அமர்வில் இடம்பெற்ற கூட்ட மொன்றின் போது ஜெனிவாவில் உள்ள இலங்கையின் ஐ.நாவிற்கான அலுவலகத்தின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலிஅருணதிலக இதனை தெரிவித்துள்ளார்.

மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்டவை போன்ற தீர்மானங்கள் இலங்கை மக்களிற்கு உதவியாக அமையப்போவதில்லை. மாறாக நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்திற்கு அவை பாதிப்பை ஏற்படுத்தும் எனஅவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் உறுப்பு நாடுகளிடம் பற்றாக்குறையாக உள்ள வளங்களை வீணாக்கும் நடவடிக்கை இது என தெரிவித்துள்ள ஹிமாலி அருணதிலக இந்த வளங்களை வேறு நோக்கங்களிற்காக பயன்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## கொட்டகலையில் பாரிய தீ விபத்து

### சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசம்



(ஹற்றன்)
கொட்டகலை நகர பகுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் தளபாட கடை தொகுதியும் வீடும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீ விபத்து நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் ஏற்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன்- நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை வூட்டன் பசார் பகுதியில் வீதிக்கு அருகாமையில் உள்ள ஒரே கட்டடத்தில் அமையப் பெற்றுள்ள தளபாட கடை மற்றும் வீடு ஆகியன முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

திம்புள்ள பத்தனை பொலிஸார், பிரதேச பொது மக்கள், நுவரெலியா மாநகர சபையினரின் தீயணைப்பு பிரிவினர், கொட்டகலை இராணுவத்தினர், மற்றும் இராணுவத்தின் தீயணைப்பு பிரிவினர் ஆகியோர் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 4 மணித்தியாலயங்களுக்கு பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும் பொருட்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து சேதமாகியுள்ளதாகவும் தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் திம்புள்ள பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## பயிற்சிப் புத்தகங்களை சலுகை விலையில் வழங்க தீர்மானம்

### கல்வி அமைச்சர் சுசில்




(கொழும்பு)
பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்களை 30 வீத சலுகையில் வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்கள் அரச அச்சக சட்டப் படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத் தினால் அச்சிடப்பட்ட பயிற்சிப் புத்தகங்களை சதொச கடைகளின் ஊடாக கொள்வனவு செய்ய முடியும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருந்தார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரொனால்டோவை பின்தள்ளி சாதனை படைத்த மெஸ்ஸி



ஆர்ஜென்டீனா கால்பந்து நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸி தமது கால்பந்து வாழ்க்கையில் 1,000 கோல்கள் என்ற புதிய மைல்கல்லை தொட்டுள்ளார்.

Nantes அணியுடன் கடந்த சனிக்கிழமை நடந்த ஆட்டத்திலேயே, 7 முறை Ballon d'Or விருதை வென்றுள்ள லியோனல் மெஸ்ஸி இந்த புதிய சாதனை படைத்துள்ளார்.

Nantes அணிக்கு எதிராக மெஸ்ஸியின் அந்த கோல் 1000 ஆவது எண்ணிக்கை என்பதுடன் PSG அணிக்காக ஐந்து ஆட்டங்களில் ஐந்து கோல்கள் என்ற புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதாவது அவர் தாமாகவே பதிவு செய்ததும் சக வீரர்களுக்காக கோல் வாய்ப்பை உருவாக்கியுள்ளதும் சேர்த்து இந்த என்ணிக்கை எனக் கூறுகின்றனர்.

இது முதல்முறையாக பார்சிலானா அணிக்காக களமிறங்கிய பின்னர். இந்த 20 ஆண்டுகளில் பதிவு செய்த சாதனை எனவும் கூறுகின்றனர்.

கால்பந்து களத்தில் 2004 இல் அறிமுகமான லியோனல் மெஸ்ஸி பார்சிலோனா மற்றும் PSG அணிக்காக இதுவரை 701 கோல்கள் பதிவு செய்துள்ளதுடன், சக வீரர்களுக்கு கோல் வாய்ப்பை உருவாக்கி அளித்துள்ள எண்ணிக்கை 299 எனவும் தெரிய வந்துள்ளது.

ஆனால் ரொனால்டோ இதுவரை 912 கோல்கள் மட்டுமே, தாமாகவும் சக வீரர்களுக்கு வாய்ப்பை உருவாக்கியதுமாக பதிவு செய்துள்ளார். மெஸ்ஸியை விடவும் 88 கோல்கள் குறைவான எண்ணிக்கையை ரொனால்டோ கொண்டுள்ளார்.

ஆனால் 1,000 கோல்கள் என்ற சாதனை கண்டிப்பாக மெஸ்ஸியின் கால்பந்து வாழ்க்கையில் ஒரு மைல்கல் என்றே கூறுகின்றனர்.

அது மட்டுமின்றி, ஐரோப்பாவின் முதல் ஐந்து லீக்குகளில் இருந்தும் எந்த வீரரும் நவீன காலத்தில் செய்யாத சாதனை இது என்பது குறிப பிடத்தக்கது. (4)

# பிறீமியர் லீக் கால்பந்து; லிவர்பூல் அணி வெற்றி



பிறீமியர் லீக் கால்பந்து தொடரின் மன்செஸ்டர் யுனைடெட் அணிக்கெதிரான போட்டியில், லிவர்பூல் அணி 7-0 என்ற கோல்கள் கணக்கில் வரலாற்று வெற்றியை பதிவு செய்துள்ளது.

இதில் லிவர்பூல் அணி சார்பில், கோடி காக்போ 43 ஆவது மற்றும் 50 ஆவது நிமிடங்களிலும் டார்வின் நுனேஸ் 47 ஆவது 75 ஆவது நிமிடங்களிலும் மொஹமட் சாலா 66ஆவது, 83ஆவது நிமிடங்களிலும் றொபர்டோ பெர்மினோ 88 ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர்.

1989 ஆம் ஆண்டு கிறிஸ்டல் பெலஸ் அணிக்காக 9-0 என்ற கோல்கள் அடித்ததே லிவர்பூல் அணியின் மிகப் பெரிய வெற்றியாக பார்க்கப்பட்டாலும், மன்செஸ்டர் யுனைடெட் அணிக்கெதிரான மிகப்பெரிய வெற்றியாக இது பதிவு செய்யப்பட்டுள்ளது.


2017 ஆம் ஆண்டுக்குப் பிறகு லீக் கிண்ணத்தை வென்ற யுனைடெட் அணிக்கு இது அதிர்ச்சி தோல்வியாக அமைந்துள்ளது.

மன்செஸ்டர் யுனைடெட், 1926இல் பிளாக்பர்ன் ரோவர்ஸிடமும் 1930 இல் ஆஸ்டன் வில்லாவிடமும் மற்றும் 1931 இல் வால்வர்ஹாம்ப்டன் வாண்டரர்ஸிடமும் இதேகோல்கள் வித்தியாசத்தில் தோற்றது. (4)




**சத்தியா**

**எதுவும் சில காலம் தான்**
**இதைப் புரிந்து கொண்டால்**
**தனிமை இனிமையாக இருக்கும்.**



**சரண்**




**விந்துஜா**

**தன்மானத்தை**
**அதிகமாக நேசிக்கிறாய்**
**என்றால் கண்டிப்பாக**
**மற்றவர்களிடமிருந்து**
**நீ தனித்து விடுவாய்**
**அதேசமயம் தனித்துவமாகி**
**விடுவாய்**

**சாருஜா**



**ஓய்வில்லாமல் உழைப்பதால் தான்**
**கடிகாரம் உயர்ந்த இடத்தை அடைந்தது.**
**நாமும் உயர வேண்டும் என்று**
**தன்னம்பிக்கை கொண்டு**
**உழைத்தால் நிச்சயமாக உயரலாம்.**

**நிருசா**

**ஒரு பெண்ணின்**
**வாழ்க்கை நன்றாக**
**அமைவது முதல் பாகம்**
**பெற்றோரை பொறுத்தும்**
**இரண்டாம் பாகம்**
**கணவனைப்**
**பொறுத்தும் மூன்றாம்**
**பாகம் பிள்ளைகளைப்**
**பொறுத்தும் அமைகிறது.**
**ஏனென்றால் அவளுக்காக**
**அவள் வாழ்வதேயில்லை**



**றேணுகா**

**இன்றைக்கு இல்லையெனில்**
**நாளை, நாளை இல்லையெனில்**
**இன்னுமொரு நாள் புலம்பாதே.**
**தள்ளித்தான் போகுமே தவிர எதுவும்**
**கிடைக்காமல் போகாது.**

**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.**
**அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல் 9 பொலிஸார் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

தென்மேற்கு பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் மாகாணம் சிப்பி நகரில் நேற்று பொலிஸார் ஒரு வாகனத்தில் சென்று கொண்டு இருந்தபோது அந்த வாகனம் மீது தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்டது.

உடலில் வெடி குண்டுகளை கட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த நபர் பொலிஸ் வாகனம் மீது மோதினார். இதில் குண்டு வெடித்ததில் பொலிஸ் வாகனம் நொறுங்கியது.

இந்த குண்டு வெடிப்பில் 9 பொலிஸார் பலியானார்கள். 15 பொலிஸார் படுகாயம் அடைந்தனர். அவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. பாகிஸ்தானில் சமீப காலமாக தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது. சமீபத்தில் மசூதி ஒன்றிலும் பொலிஸ் தலைமை அலுவலகத்திலும் தாக்குதல் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# இந்தியாவில் பரவி வரும் புதிய வகை வைரஸ் காய்ச்சல்

(புதுடில்லி)

**கொரோனா வைரஸைப் போன்ற வைரஸ் காய்ச்சலொன்று இந்தியாவில் பல மாநிலங்களில் பரவி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இந்திய சுகாதார அமைச்சினால் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிக காய்ச்சல், தலைவலி மற்றும் தொடர் இருமல் ஆகியவை இந்த வைரஸின் முக்கிய அறிகுறிகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், இது தொடர்பாக இந்திய சுகாதாரத் துறை ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

இது இன்ஃப்ளுவன்ஸா வைரஸ் குழுவைச் சேர்ந்த H3N2 உப பிறழ்வு வகை என அடையாளம் காணப்பட்டுள்ளது. (நி)





இந்திய கடற்படைத் தளபதிகளின் மாநாடு, அந் நாட்டின் முதல் உள்நாட்டு விமானம் தாங்கிக் கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்தில் நேற்று ஆரம்பமானது.

# ரோஹிங்யா அகதிமுகாமில் பாரிய தீ விபத்து 2 ஆயிரம் குடியிருப்புகள் தீயில் எரிந்து நாசம்

(டாக்கா)

பங்களாதேஷில், மியன்மாரின் ரோஹிங்யா அகதிகள் தங்கியிருந்த முகாமில் ஏற்பட்ட தீயினால் சுமார் 2,000 குடியிருப்புகள் அழிவடைந்துள்ளன. இதனால் சுமார் 12,000 பேர் தங்குமிடங்களை இழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குட்டுபலோங் நகரிலுள்ள அகதிகள் முகாமில் நேற்று முன்தினம் பிற்பகல் இத்தீ பரவ ஆரம்பித்தது.

இத்தீயினால் 2000 குடியிருப்புகள் தீக்கிரையாகி அழிந்துள்ளதாகவும் 12 ஆயிரம் பேர் தங்குமிடங்களை இழந்த நிலையில் இடம்பெயர்ந்துள்ளதாகவும் பங்களாதேஷின் அகதிகள் ஆணையாளர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.



அத்துடன் குறைந்தபட்சம் 35 பள்ளிவாசல்கள், 21 கற்கை நிலையங்களும் தீக்கிரையாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி அகதிகளில் பெரும்பாலானோர், மியன்மாரின் ராக்கைன் மாநிலத்திலிருந்து வன்முறைகள் காரணமாக 2017 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தவர்கள் ஆவர்.

2021 ஜனவரி முதல் 2022 டிசெம்பர் வரை ரோஹிங்யா அகதிகள் முகாமில் 222 தீப்பரவல் சம்பவங்கள் இடம்பெற்றதாக பங்களாதேஷ் பாதுகாப்பு அமைச்சு கடந்த வாரம் தெரிவித்திருந்தது. இவற்றில் 60 சம்பவங்களில் வேண்டுமென்றே தீ மூட்டப்பட்டிருந்ததாகவும் அவ் வமைச்சு தெரிவித்திருந்தது. (நி)

# அந்தமான் தீவுகளில் நிலநடுக்கம்

(போர்ட் பிளேயர்)

அந்தமான் நிக்கோபார் தீவு கள் பகுதியில் நேற்று அதி காலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அதிகாலையில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவு கோலில் 5 ஆக பதிவானது. நில நடுக்கத்தின் ஆழம் பூமிக்கு அடியில் 10 கி.மீ தூரத்தில் இருந்தது.

சமீப காலமாகவே இந்தியாவின் பல பகுதிகளில் நிலநடுக்கம், நிலஅதிர்வுகள் பதிவாகி வருவது மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி வருகிறது.

கடந்த இரு மாத காலத்தில் டெல்லி ஹரியானா சுற்றுவட்டார பகுதிகளிலும் சில வட கிழக்கு மாநிலங்களும் நில அதிர்வுகள் உணரப்பட்டன. (நி)

# இராசிபலன்

07.03.2023
மாசி 23, செவ்வாய்க்கிழமை
பூரணை முன்னிரவு 7.06 மணிவரை

பூரம் பின்னிரவு - 3.08 மணிவரை
சுபநேரம் -10.55-12.25 மணிவரை
இராகுகாலம் - 3.25-4.55 மணிவரை

சந்திராஷ்டமம் - அவிட்டம்
சித்தாமிர்தம், பூரணைவிரதம்

வளவன்




வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.




இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள்.




தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.




குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புகளும் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




புதிய தொழில் வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், விட்டுச் சென்ற உறவுகள் விரும்பி வந்திணைவர், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.




பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, அனைவரையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.




வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய நபர்களை சந்திப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுடைய மனப்பாங்குதான் உன் உயர்வைத் தீர்மானிக்கும்.

### மீனவர்களின் பிரச்சினைக்காக
# வடக்கு எம்.பிக்கள் ஒன்றிணைவது மகிழ்ச்சி அளிக்கிறது - டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக வடக்கு மாகாணத்தினை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. குறித்த செயற்பாடு என்னுடைய முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சின் ஊடகப் பிரிவு, ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது வளங்களையும் எமது மக்களின் வாழ்வாதாரங்களையும் அழிக்கின்ற இந்திய கடற்றொழிலாளர்களின் சட்ட விரோத தொழில் முறைகள் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்பதில் தொடர்ச்சியாக இறுக்கமான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி வருகின்றேன்.

அதனை கட்டுப்படுத்துவதற்காக இராஜதந்திர ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் கச்சதீவு சந்திப்புக்கள் போன்று நட்பு ரீதியாகவும் தொடர்ச்சியாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சூழலில் வடக்கு மாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்திருப்பதை நம்பிக்கையளிக்கும் செயற்பாடாகவே நான் பார்க்கின்றேன்.

ஏற்கனவே, கடற்றொழில் மற்றும் நீர் வேளாண்மை எனப்படும் கடலட்டை வளர்ப்பு, கடல்பாசி வளர்ப்பு மற்றும் பண்ணை முறையிலான கடலுணவு வளர்ப்பு முயற்சிகளுக்கு கடற்றொழிலாளர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்ற நிலையில், குறித்த சந்திப்பும் இடம்பெற்றுள்ளது. எதிர்காலத்திலும் இவ்வாறான ஒன்றிணைவுகள் தொடர வேண்டும்.

எமது மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் எமது மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் நலன்களுக்கு அப்பால் இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்" என்று தெரிவித்துள்ளார். (4-33-104)

# கைதடியில் கடத்தப்பட்ட வான் வேம்பிராய் பகுதியில் மீட்பு



(சாவகச்சேரி)

கடந்த சனிக்கிழமை பிற்பகல் தென்மராட்சி-கைதடி பகுதியில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட ஹயஸ் வாகனம் நேற்று திங்கட்கிழமை காலை மீசாலை வடக்கு வேம்பிராய் மயானத்திற்கு அருகாமையில் மீட்கப்பட்டுள்ளது.

விற்பனைக்காக நின்ற வாகனத்தை பார்வைக்காக கைதடிக்கு எடுத்து வருமாறு கூறி சாதுரியமாக கடத்திச் செல்லப்பட்ட நிலையில் இவ்வாறு கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேம்பிராய் பகுதியில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனம் இலக்கத்தகடுகள் அற்ற நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை தடயவியல் பொலிஸார் மற்றும் சாவகச்சேரிப் பொலிஸார் ஆகியோர் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30-33)

# பெருமளவான கசிப்புடன் அச்சுவேலியில் ஒருவர் கைது

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, அச்சுவேலி, வாதரவத்தை - பெரிய பொக்கணை பகுதியில் வைத்து 30 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அதே பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர். ஆவார். காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர் தனது வீட்டிற்கு அருகே உள்ள காணி ஒன்றில், கசிப்பினை போத்தல்களில் அடைக்கும் போது இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.,

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சான்றுப் பொருட்களுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றத் தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

# ஆலயங்களில் திருட்டில் ஈடுபட்ட வெளிமாவட்ட கும்பல் சிக்கியது
## பெருமளவு நகைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களில் நகை திருட்டில் ஈடுபட்டு வந்த கும்பல் ஒன்றினை இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, நுணசை சிவன் கோவிலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த உற்சவத்தில் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டியில் வந்த வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் அடங்கிய கும்பலால் இந்தத் திருட்டு மேற்கொள்ளப்பட்ட நிலையில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்ட நிலையில், மற்றுமொரு பெண் தலைமறைவாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களில் அண்மை காலமாக இடம்பெற்ற பல்வேறுபட்ட நகை திருட்டுகளுடன் குறித்த கும்பலுக்கு தொடர்புள்ளதாக் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த கும்பலினால் களவாடப்பட்ட நிலையில் ஒரு தொகை திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-33-104)

# மிருசுவில் பகுதியில் எறிகணை மீட்பு



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில்- கரம்பகம் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

காணியை துப்புரவு செய்த போதே குறித்த எறிகணை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் காணி உரிமையாளர் இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் அடிப்படையில் வெடிபொருளை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

# வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்).

புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பதில் அதிபர் சு. இந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

4 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். எழுது மட்டுவாழ் பகுதியில் வைத்து கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேக நபரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4-33)

# வட்டு.மேற்கு பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

(அராலி)

வட்டு. மேற்கு பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றின் தொலைத்தொடர்பு கோபுரத்தினை அமைப்பதற்கு, மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வலி. மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த கடிதத்தின் பிரதியை விமானப்படை, பாதுகாப்பு அமைச்சு, சுற்றாடல் அதிகாரசபை, UDA, MOH, வடக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி மன்ற உதவி ஆணைய ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை கிராமத்தில், மூளாய் 4 ஆம் ஒழுங்கையில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு டயலொக் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதேச சபையிடம் தொடர்புகொண்டு கேட்ட போது, பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்டதாக கூறப்பட்டது. டயலொக் நிறுவனத்தால் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இக் கிராம பொது அமைப்புகளிடமும் அனுமதி/சம்மதக் கடிதம் பெறப்பட்டதாக பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

ஆனால் இக்கோபுரம் அமைக்கும் இடத்திற்கும் சம்மதக் கடிதம் வழங்கிய அமைப்புக்களுக்குமிடையில் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அத்துடன் தொலைத் தொடர்பு கோபுரத்தினை அமைப்பதற்கு காணியை வழங்கிய நபர் இப்பிரதேசத்தில் இல்லை, அத்துடன் இக் காணியின் உரிமையாளர் தன்னுடைய காணியில் இரண்டாவது கோபுரம் அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

அத்துடன் கோபுரம் அமைப்பது அயல் வீட்டாருக்கு கூட தெரியாத வகையில் பணிகள் முடக்கி விடப்பட்டிருந்தது. இத் தொலைத்தொடர்பு கோபுரம் இப்பிரதேச குடியிருப்பு பகுதியினுள் அமையவிருப்பதால் மக்கள் உடலியல் ரீதியான பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படலாம்.

எனவே இந்த கோபுரத்தினை அமைப்பதற்கு இப்பிரதேச மக்கள் எதிர்ப்பினை வெளியிடுவதுடன், இதனை அமைப்பதை உடனடியாக இடைநிறுத்துமாறு வேண்டுகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-104)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (படம் - சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் பிற்பகல் 1 மணிக்கு பிரதி அதிபர் க. தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

## சமூக நல கொடுப்பனவுகளை பெற

# போலித் தகவல்களை வழங்குவோர் மீது சட்ட நடவடிக்கை- நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

**சமூக நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்காக போலியான தகவல்களை வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான இயலுமை காணப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 37 இலட்சம் விண்ணப்பங்களில் 2 இலட்சம் விண்ணப்பங்கள் இதுவரை பரிசீலிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பரிசீலனை நடவடிக்கைகளுக்காக வருகை தரும் அதிகாரிகளுக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குமாறும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மாத இறுதிக்குள் விண்ணப்பங்கள் தொடர்பான பரிசீலனைகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (நி)



# வியாழன் கூடுகின்றது அரசியலமைப்பு பேரவை

(கொழும்பு)
சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாட அரசியலமைப்பு பேரவை நாளை மறுதினம் வியாழக்கிழமை மீண்டும் கூடவுள்ளது.

இதன்போது உறுப்பினர்கள் நியமனம் தொடர்பான சில முக்கிய தீர்மானங்கள் அங்கு எடுக்கப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நிதி ஆணைக்குழு, கொள்முதல் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன அடங்கும். (நி)

# எதிர்வரும் வாரங்களில் எரிபொருள் விலைகள் குறையலாம்?



(கொழும்பு)
எதிர்வரும் வாரங்களில் உள்ளூர் சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறையலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளதால் பெற்றோலிய உற்பத்தி பொருட்களின் விலைகள் குறைவடையலாம் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ரூபாவின் பெறுமதி வேகமாக அதிகரித்தால் பணவீக்கம் வேகமாக வீழ்ச்சியடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைகள் குறைவடைந்தால் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் எரிவாயு விலைகளும் குறைவடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# வீதி மறியல் போராட்டம் காரணமாக 500 மில்லியன் ரூபாய் நட்டம்

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)
தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் வீதிமறியல் போராட்டங்கள் காரணமாக 500 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் இன்று பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி)

# நெல் கொள்வனவு ஆரம்பம்

(கொழும்பு)
பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மஹகன்னாவில் நெல் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (நி)

# பெரமுனவில் இருந்து நீக்கப்பட்டதற்கான எழுத்துமூல அறிவிப்பு வழங்கப்படவில்லை

### பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)
பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் இருந்து தம்மை நீக்கியதாக எழுத்து மூல அறிவிப்பு எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், அவ்வாறான அறிவித்தல் கிடைத்தால் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.



அண்மையில் உயர் நீதிமன்றம் வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டுள்ளது என்றும் அதற்கு தலை வணங்குவதாகவும் தெரிவித்தார். (நி)

# நியூசிலாந்து உயர்ஸ்தானிகர்- சஜித் சந்திப்பு



(கொழும்பு)
இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்பிள்டனுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் நியூசிலாந்து உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் வறுமையை ஒழிக்க நியூசிலாந்து அரசாங்கத்தின் ஆதரவை கோரிய எதிர்கட்சித் தலைவர், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவம் குறித்தும் சுட்டிக்காட்டினார். (நி)

# சு.க வின் பதில் பொதுச் செயலாளராக சரத் ஏக்கநாயக்க நியமனம்

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளராக, மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர வெளிநாடு சென்றுள்ளமையால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



சரத் ஏக்கநாயக்க ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பிரதி பொதுச்செயலாளராக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நிதி பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாவைப் பயன்படுத்த திட்டம்

(கொழும்பு)
நிதி பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாவைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இலங்கையும் இந்தியாவும் ஆராய்ந்து வருகின்றன.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இரு நாடுகளுக்கும் இடையிலான பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாவை பயன்படுத்துவது குறித்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்தது.

இதன்போது Vostro/ Nostro கணக்குகள் மூலம் குறிப்பிடப்பட்ட வர்த்தக பரிவர்த்தனைகளை மேற்கொள்வது குறித்து இலங்கை வங்கி, பாரத ஸ்டேட் வங்கி மற்றும் இந்தியன் வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துரையாடினர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 120





நம் வஜ்ராயுதத்தினால் கூட முடியாதே!' என்ற பீதி இந்திரனுக்கு உண்டாகி விட்டதைக் கவனித்து வஜ்ராயுதத்தைவிட வலிமை வாய்ந்த ஓர் அங்குசத்தையும் அளித்தார்"

"பின்னர் ஒரு காலத்தில், செங்கதிர் பரப்பி உலகுக்கெல்லாம் ஒளி தரும் சூரிய பகவானுக்கும் ராகு என்னும் அரக்கனுக்கும் பெரும் போர் மூண்டது. ராகு, தினகரனை விழுங்கப் பார்த்தான் முடியவில்லை! தினகரனுடைய ஒளி அவ்விதம் ராகுவைத் தகித்துவிட்டது.

ஆனால் சூரியனுடைய தேரில் பூட்டிய குதிரைகள் ஏழும் ராகுவின் காலகோடி விஷத்தினால் தாக்கப்பட்டு இறந்தன. சூரியன் தன் பிரயாணத்தை எப்படித் தொடங்குவது என்று திகைத்து நிற்கையில், அவனுடைய திக்கற்ற நிலையைக் கண்ட சுந்தரசோழர் ஏழு புதிய குதிரைகளுடன் சூரிய பகவானை அணுகி, 'ரதத்தில் இந்த குதிரைகளைப் பூட்டிக்கொண்டு சென்று உலகத்தை உய்விக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். தன் குலத்தில் வந்த ஒரு சோழ சக்கரவர்த்தி இவ்விதம் சமயத்தில் செய்த உதவியைச் சூரியனும் மிக மெச்சினான்."

"பின்னர் சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் கைலையங்கிரியில் திருமணம் நடந்தது. பெண் வீட்டார் கலியாணச் சீர்வரிசைகளுடன் வந்திருந்தார்கள். ஆனால் பல்லக்குக் கொண்டு வரத் தவறி விட்டார்கள். ஊர்வலம் நடத்துவதற்கு எருது மாட்டைத் தவிர வேறு வாகனம் இல்லையே என்று கவலையுடன் பேசிக் கொண்டார்கள்.

இதை அறிந்த சுந்தர சோழ சக்கரவர்த்தி, உடனே, பழையாறை அரண்மனையிலிருந்து தமது முத்துப் பல்லக்கைக் கொண்டுவரச் சொன்னார். பயபக்தியுடன் சிவபெருமான் திருமணத்துக்குத் தம் காணிக்கையாக அப்பல்லக்கை அளித்தார். அப்படிப்பட்ட சுந்தர சோழ சக்கரவர்த்திக்கு உவமை சொல்லக் கூடியவர்கள் இந்த விரிந்து பரந்த, அலை கடல் சூழ்ந்த பெரிய உலகத்தில் வேறு யார் இருக்கிறார்கள்?"

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சுந்தர சோழ சக்கரவர்த்தி 'கலீர்' என்று சிரித்தார். நோயின் வேதனையினால் நெடுநாள் சிரித்தறியாத சக்கரவர்த்தியின் சிரிப்பு அவருடைய இணைபிரியாப் பத்தினியான மலையமான் மகள் வானவன்மாதேவிக்கும் தாதியர்களுக்கும் அரண்மனை வைத்தியருக்கும் கூடச் சிறிது உற்சாகத்தை அளித்தது.

கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையர் இத்தனை நேரமும் நின்று கொண்டேயிருந்தவர். சக்கரவர்த்தியைக் கை கூப்பி வணங்கி, "பிரபு! நான் பெரிய தவறு செய்து விட்டேன் பிழை பொறுத்து மன்னிக்க வேண்டும்!" என்றார்.

"ஆ! தளபதியா பேசுகிறது? நீர் என்ன பிழை செய்தீர்? எதற்காக மன்னிப்பு? ஒரு வேளை இந்திரனுக்கு நான் அளித்த வெள்ளை யானையையும் சூரியனுக்கு அளித்த குதிரைகளையும் திரும்பப் பறித்துக் கொண்டு வந்து விட்டீரோ? சிவபெருமானிடமிருந்து சிவிகையையும் பிடுங்கிக்கொண்டு வந்து விட்டீரோ? செய்யக் கூடியவர் தான் நீர்!" என்று சுந்தர சோழர் சொல்லி மீண்டும் சிரித்ததும், சக்கரவர்த்தியுடன் சேர்ந்து புலவர்களும் சிரித்தார்கள்.

எல்லாரையும் காட்டிலும் அதிகமாக வந்தியத்தேவன் சிரித்தான். அதைச் சின்ன பழுவேட்டரையர் கவனித்து அவனை நோக்கிக் கடுமையாக ஒரு பார்வை பார்த்தார்.

அதைவிடச் சிறந்த யானைகள் தான் இருக்கின்றன!" என்று கூறி, இந்திரனைத் தமது யானைக் கொட்டாரத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே குன்றங்களைப் போல் நின்ற ஆயிரக்கணக்கான யானைகளைத் தேவேந்திரன் பார்த்துவிட்டு, 'எதைக் கேட்பது?' என்று தெரியாமல் திகைத்து நின்றான்.

அவனுடைய திகைப்பைக் கண்ட சுந்தர சோழர், தாமே ஒரு யானையைப் பொறுக்கி இந்திரனுக்கு அளித்தார். 'அந்த யானையை எப்படி அடக்கி ஆளப்போகிறோம்?

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பெரிய சோம்பறி யார்?

(நேற்றைய தொடர்ச்சி...)



அவன் சில சமயங்களில் தாடி மீசையைச் சொரிந்து கொள்கிறான். அது மட்டும் அல்ல. தன் மீசையில் அமர வரும் காக்கைகளை விரட்டுவதற்காக கூழாங் கற்களை அவற்றின் மேல் எறிகிறான் என்றான்.

மூன்றாம் அமைச்சனைப் பார்த்து, நீ பார்த்து வந்த சோம்பேறியைப் பற்றிச் சொல் என்று கேட்டான் அரசன்.

அரசே! நானும் பல நாடுகளுக்குச் சென்றேன், ஓர் ஊரில் சோம்பேறி ஒருவனைக் கண்டேன். உங்களுக்கு மருமகனாக மிகவும் பொருத்தம் உடையவன்.

சோம்பல் காரணமாக கடந்த இருபது ஆண்டுகளாக அவன் வீட்டை விட்டு வெளியே சென்றது இல்லை. நாற்காலியில் அமர்ந்து இருந்தபடியே எல்லோருக்கும் அவன் அறிவுரை வழங்குவான். நான் சென்றிருந்த சமயம் அவன் வீட்டில் தீப் பிடித்துக் கொண்டது.

அவன் உடையிலும் தீப்பிடித்துக் கொண்டது. இருந்த இடத்தை விட்டு அசையவில்லை அவன். வெளியே இருந்தவர்கள் எல்லோரும் கத்தினார்கள். எந்தப் பயனும் இல்லை. வீட்டிற்குள் நுழைந்த சிலர் அவனை அப்படியே வெளியே தூக்கி வந்து காப்பாற்றினார்கள் என்றான்.

உண்மையிலேயே இவன் பெரிய சோம்பேறிதான் என்ற அரசன் நான்காம் அமைச்சனைப் பார்த்தான்.

அரசே! நான் காடு மலைகளில் அலைந்தேன். முட்புதர்களில் சிக்கி என் உடைகள் கிழிந்து விட்டன. அதுவும் நல்லதற்குத் தான்.

அதனால்தான் அந்தச் சோம்பேறியைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என்றான் அவன். அவன் என்ன செய்தான்? என்று பரபரப்புடன் கேட்டான் அரசன். அரசே! அவன் தன் வீட்டுத் தோட்டத்தில் ஒரு மரத்தடியில் பதினைந்து ஆண்டுகளாகப்படுத்திருக்கிறான்.

தன் வாயிற்கு அருகே கரட், முள்ளங்கி ஏதேனும் முளையாதா என்று காத்துக் கொண்டிருக்கிறான். அவன் நெற்றியில் உள்ள சுருக்கத்தில் இரண்டு முள்ளங்கிச் செடிகள் முளைத்துள்ளன. அதைப் பிடுங்கிப் போடக்கூட அவன் தன் கை விரல்களைப் பயன்படுத்தவில்லை.

மரத்திலிருந்து அவன் வாயிற்கு நேராக ஏதேனும் பழங்கள் விழுந்தால் உண்பான். பக்கத்தில் விழுந்தால் அதை எடுத்து உண்ண மாட்டான் என்றான் அவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரியஒளி போன்றது அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.
- மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# இலங்கைக்கு ஏற்பட்டுள்ள குருச்சந்திர யோகம்

இலங்கை ரூபாயின் பெறுமதி சற்று உயர்வடைந்துள்ளதால், டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு டொலரின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, இலங்கைக்கு இரண்டு வழிகளில் சாதகநிலையைத் தோற்றுவிக்கும் எனலாம்.

அதாவது இலங்கை ரூபாயின் பெறுமதி உயர்வடைந்துள்ளதால், இறக்குமதிப் பொருட்களின் விலைகள் கணிசமாகக் குறையக் கூடிய வாய்ப்பு உள்ளது.

இது நாட்டின் பொருளாதாரத்தில் முன்னேற்றகரமான சூழமைவை ஏற்படுத்தும்.

தவிர, டொலரின் பெறுமதி குறையும்போது, உள்நாட்டில் டொலர்களைப் பதுக்கி வைத்திருப்பவர்கள் அவற்றை அவசர அவசரமாக ரூபாய்க்கு மாற்றத் தொடங்குவர்.

இதனால் மத்திய வங்கியின் கையிருப்பில் உள்ள டொலரின் அளவில் மேலும் அதிகரிப்பை ஏற்படுத்தும்.

உண்மையில் உள்நாட்டில் கணிசமான அமெரிக்க டொலர் மற்றும் ஸ்ரேலிங் பவுண், யூரோ ஆகிய வெளிநாட்டு நாணயங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

ரூபாயின் பெறுமதி குறையும்போது டொலர் உள்ளிட்ட வெளிநாட்டு நாணயங்களை விற்பனை செய்வதன்மூலம் கணிசமான இலாபத்தை ஈட்ட முடியும் என்ற அடிப்படையில், இந்தப் பதுக்கல்முறைமை அமுலில் உள்ளது.

இந்நிலையில் டொலரின் பெறுமதி கணிசமாகக் குறைவடைவதன் காரணமாக, வெளிநாட்டு நாணய விற்பனை மூலம் இலாபம் உழைக்கலாம் என எதிர்பார்த்திருந்தவர்கள் நாளுக்கு நாள் நட்டத்தை அனுபவிப்பர்.

இதன் காரணமாக தாம் பதுக்கி வைத்துள்ள டொலர் மற்றும் ஸ்ரேலிங்பவுண், யூரோ ஆகிய நாணயங்களை ரூபாய்க்கு மாற்ற முண்டியடிப்பர்.

இதன்மூலம் இலங்கை மத்திய வங்கிக்கு கணிசமான வெளிநாட்டு நாணயங்கள் வந்து சேரும்.

ஆக, உல்லாசப் பயணிகளின் வருகையும் நம் புலம்பெயர் தமிழ் மக்கள், தமது பாடசாலைக் காலத்து நினைவுகளையும் பல்கலைக்கழக நட்புகளையும் சந்திக்கும் பொருட்டு நட்புச் சங்கம நிகழ்வுகளை ஏற்பாடு செய்து, அதன் பொருட்டு ஏகப்பட்டவர்கள் தாயகம் வருவதாலும் இலங்கைக்கு வெளிநாட்டு நாணயங்களை உழைக்கின்ற குருச்சந்திர யோகம் அதிரடியாக ஏற்பட்டது.

இவ்வாறு ஏற்பட்ட குருச்சந்திரயோகமானது உள்நாட்டில் பதுக்கி வைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களையும் வெளிக்கிழப்பும்.

இந்த வகையிலேயே இலங்கைக்கு சாதகமான சூழ்நிலை உருவாகியுள்ளதெனலாம்.

எதுஎவ்வாறாயினும் சூறையாடப்பட்ட இந்த நாட்டின் பொருளாதாரம் மீட்கப்பட்டால் மட்டுமே பொருளாதார மீட்சி என்பது சாத்தியமாகும் என்ற உண்மை உணரப்படுதல் அவசியம்.

# முட்டை இறக்குமதி செய்வதால் பறவைக் காய்ச்சல் பரவும் அபாயம்

## விவசாயத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதால் இலங்கையில் பறவைக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகம் என விவசாயத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கே.பி.குணரத்ன தெரிவித்துள்ளார்.

பறவைக் காய்ச்சல் அதிகம் உள்ள தமிழகத்திலிருந்து முட்டைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மேலும், பறவைக் காய்ச்சல் பரவி வருவதால் அங்கு முட்டை விலை குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முட்டை தொடர்பாக இந்தியாவினால் வழங்கப்படும் தரநிலை அறிக்கை கிடைக்கப்பெறும் என வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறாத காரணத்தினால் முட்டை இறக்குமதியில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையை இந்திய விலங்குகள் மற்றும் சுகாதாரத் துறை வழங்கவுள்ளது. (ம-7)

# நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட பௌத்த மதகுருமார்கள் அனுமதிக்க மாட்டார்கள்

## விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு

பௌத்த மதகுருமார்கள் இந்த நாட்டை சீரழித்துக் கொண்டே இருப்பார்கள். நாட்டை முன்னேற்றவோ, நல்லிணக்கத்தை ஏற்படுத்தவோ அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக மகாசங்கம் பற்றிய உங்களது கருத்துக்கள் சிங்களவர்கள் மத்தியில் எதிர்மறையான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. மகாசங்கத்தினரை விமர்சிப்பது புத்திசாலித்தனமா? என ஊடகவியாளர் கேள்விக்கு பதில் வழங்கையிலேயே அவர் இதனை அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். குறித்த அறிக்கையில்,

என் வயது முதிர்ந்த வயதிலேயே அதன் விளைவுகளை உணர்ந்து பூனைக்கு .மணி கட்டும் பணியை நான் மேற்கொண்டேன். பௌத்த மதகுருமார்கள் அரசின் விவகாரங்களில் தீவிரமாகப் பங்கேற்பதால் ஏற்படும் ஆபத்துகளை அனைத்து '. சமூகங்களைச் சேர்ந்த மக்களும் சுட்டிக்காட்ட வேண்டிய நேரம் இது.

ஆனால் நிச்சயமாக அறிவுள்ள பௌத்த மதகுருமார்கள் தெற்கு மற்றும் வடக்கு கிழக்கிற்கு இடையில் சமாதான தூதுவர்களாக செயல்பட முடியும்.

பௌத்த பிக்குகளின் ஆங்கிலம் அல்லது தமிழ் பேசும் தூதுக்குழு ஒன்று முதலில் வடக்கில் உள்ள எமது புத்திஜீவிகளை சந்தித்து தமிழர்களின் பிரச்சினைகள் என்ன என்பதை அறிந்து கொள்ளுமாறு நான் பரிந்துரைக்கிறேன்.

அதன்பிறகு, வரலாறு மற்றும் தொல்லியல் துறையின் சமீபத்திய முன்னேற்றங்கள் பற்றிய குறிப்புகளைப் பகிர்ந்து கொள்ள, எங்கள் வரலாற்றுப் பேராசிரியர்களுக்கு இடையே தொடர்பு கொள்ளலாம்.

அதே சமயம் அடிமட்ட மட்டத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும் வகையில் இரு சமூகத்தினருக்கும் இடையிலான சந்திப்புகளை சிங்கள தமிழ் நட்புறவுச் சங்கங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மனித உரிமைகள் ஆணையாளர்களை வடக்கிற்கு அனுப்புவது மக்களின் தேவைகள் மற்றும் உணர்வுகள் பற்றிய சரியான கண்ணோட்டத்தையோ அல்லது போர்க் குற்றங்கள்; மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான எந்தவொரு விசாரணையும் சர்வதேச உள்ளீட்டுடன் இருக்க வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையை வழங்காது என்றார். (ம-7)

# போலி நாணயத்தாள்களுடன் திருமலையில் இருவர் கைது

(திருகோணமலை)

திருகோணாமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 12 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களுடன் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியாவில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இப்போலி நாணயத்தாளை பயன்படுத்தி பொருட்கள் கொள்வனவு செய்ய முயற்சிக்கும் போது பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து போலி நாணயத்தாளை கொண்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் கிண்ணியா உதவிப் பொலிஸ் அதிகாரி ராஜித குருசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற விசாரணைகளை அடுத்து இப் போலி நாணயத்தாள்கள் அச்சிட்ட அச்சகத்தினை சேர்ந்த மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# சாரதிகள் இன்மையால் ரயில் சேவைகள் இரத்து

(கொழும்பு)

சாரதிகள் இன்மை காரணமாக நேற்று சில ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய கோட்டை - மட்டக்களப்பு உதயதேவி ரயில் சேவை, கோட்டை - புத்தளம் மற்றும் களுத்துறை இடையிலான 5 ரயில் சேவைகள் இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ரயில் போக்குவரத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் சாரதிகளை இணைத்துக்கொள்வது தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் வினவியுள்ள போதிலும் இதுவரை பதில் கிடைக்கவில்லை என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

# தங்கத்தின் விலை வீழ்ச்சி

இலங்கையில் நேற்று திங்கட்கிழமை தங்கத்தின் விலை குறைந்துள்ளதாக தங்க உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, தங்க அவுன்ஸ் - ரூ. 638,284.00, 24 கரட் 1 கிராம் - ரூ. 22,520.00, 24 கரட் 8 கிராம் (1 பவுண்) - ரூ. 180,150.00, 22 கரட் 1 கிராம் - ரூ. 20,650.00, 22 கரட் 8 கிராம் (1 பவுண்) - ரூ. 165,150.00, 21 கரட் 1 கிராம் - ரூ. 19,710.00, 21 கரட் 8 கிராம் (1 பவுண்) - ரூ. 157,650.00 விற்பனை செய்யப்படுகின்றது. (ம-7)

# கோப் குழுவில் முன்னிலையாகுமாறு அரச நிறுவனங்களுக்கு அழைப்பு

கோப் எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் இந்த வாரம் முன்னிலையாகுமாறு பல அரச நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்றைய தினம் மத்திய கலாசார நிதியம் மற்றும் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபன அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், நாளை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமும், எதிர்வரும் 9ஆம் திகதி மறுசீரமைப்பு ஆணைக்குழுவும் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மாவட்டத்தில்
# பெரியம்மை நோய்த்தாக்கத்தால் உயிருக்கு போராடும் கால்நடைகள்

(தருமபுரம்)

**முல்லைத்தீவு மாவட்டத்திலும் சில பகுதிகளில் பெரியம்மை நோய்த்தாக்கம் காரணமாக சில கால்நடைகள் உயிருக்குப் போராடும் நிலையில் உள்ளதாக கால்நடை உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



அந்த வகையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு பகுதியில் பல கால்நடை உரிமையாளர்களின் கால்நடைகள் மிக சடுதியாக பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் நோய் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் நீர் கூட அருந்த முடியாத நிலையில் காணப்படுவதுடன் மெலிவடைந்தும் காணப்படுகிறது.

இந்தநோய் தாக்கத்திற்கான மருந்துகள் பெற முடியாத நிலையில் கால்நடை உரிமையாளர்கள் மிக அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும் கால்நடைகள் பெரும் அவதிப்படுவதாகவும் சில கால்நடை உரிமையாளர்கள் தமது வாழ்வாதாரமே அழிவடைந்துவரும் நிலை காணப்படுவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கால்நடை வைத்திய அதிகாரிகள் கால்நடை வளர்ப்போரின் நலனை கருத்தில் கொண்டு குறித்த நோய்த்தாக்கத்திற்கான தீர்வை பெற்றுத்தருமாறும் கோரியுள்ளனர். (4-6-316)

# அக்கராயனில் யானைகளின் அட்டகாசம் அதிகரிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் கிழக்கு மக்கள் கடந்த இரு நாட்களாக காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். கோணாவில் யூனியங்குளம் காடு வழியாகவும் அக்கராயன் குளப்பக்கம் இருந்தும் கிராமத்திற்குள் வருகை தந்த யானைகள் 40 இற்கு மேற்பட்ட தென்னைகளை அழித்துள்ளதுடன் மக்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்துள்ளன.

இதனையடுத்து ஒன்று திரண்ட மக்கள் வெடிகளை கொளுத்தியும் தகரங்களில் ஒலிகளை எழுப்பியும் யானைகளை காட்டுக்குள் விரட்டி உள்ளனர்.

முதல் நாள் காட்டுக்குள் சென்ற யானைகள் மறுநாளும் கிராமத்திற்குள் வருகை தந்ததன் காரணமாக மக்கள் ஒன்று கூடி ஒலி எழுப்பி யானைகளை விரட்டி அடித்துள்ளனர். கிராமத்திற்குள் வருகை தந்து பயிர் அழிவுகளை ஏற்படுத்தும் யானைகள் தொடர்பாக கிராம மக்களினால் கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் கிராம அலுவலரினால் யானை வெடிகளை பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (4-6-350)

# மதுப் பிரியர்களின் ஆதிக்கத்தில் மைதானம்
## பொதுமக்கள் விசனம்

(அக்கராயன்)

கிளிநொச்சி கண்டாவளை புன்னைநீராவி நாதன் குடியிருப்பு பகுதியில் உள்ள பொது மைதானம் சமூக சீர்கேடுகளுக்கு பயன்படுத்தப்படுவதாக அப்பகுதி விளையாட்டு வீரர்களினாலும் பொது மக்களினாலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றன.

இம் மைதானத்தின் நிர்வாகம் விளையாட்டு வீரர்களை முழுமையாக விளையாட அனுமதிப்பதில்லை என்ற பிரதான குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இம் மைதானத்தினை நிர்வகிக்கின்ற விளையாட்டுக் கழகம் மூன்று வருடங்களாக இயங்கமால் உள்ளது. நிர்வாக கூட்டங்கள் நடைபெறுவதில்லை. குறித்த மைதானம் தற்போது மது அருந்துபவர்கள் சமூக சீர்கேட்டிற்கு பயன்படுத்துபவர்களின் ஆதிக்கம் நிறைந்துள்ளது.

மைதானத்தில் தற்போது சாராயப் போத்தல்களும் பியர் ரின்களும் நிறைந்து காணப்படுகின்றன.

இவ் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகத்தினை நீக்கி புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டும் என விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் மைதானத்தில் மது அருந்துபவர்கள், சமூக சீர் கேடுகளில் ஈடுபடுபவர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி விளையாட்டு வீரர்களும் பொதுமக்களும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-350)

## நூல் வெளியீடும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

நூலாசிரியர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் "திருக்கேதீச்சர இலக்கியம்" நூல் வெளியிடும் அகில இலங்கை இந்து மாமன்ற முன்னாள் தலைவர் அமரர். கந்தையா நீலகண்டனின் நினைவுப் பேருரையும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் ரிஷி. தொண்டுநாதன் சுவாமிகள் தலைமையில் இடம் பெறவுள்ளது. (4)

## 'சுட்ட மண்' கவிதை நூல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் ச. முகுந்தனின் "சுட்டமண்" கவிதை நூல் அறிமுக நிகழ்வு இன்று 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெய சீலன் தலைமையில் இடம்பெறும்.(4)

## தெய்வீகத் திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை நல்லூர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தலைமையில் இடம்பெறும். (4)

## அரச ஊழியர்களுக்கு காணி வழங்கல்
# தொடர்பில் தகவல் கோரல்

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு காணி வழங்குவதில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக தகவல் கோரப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டளவில் சுமார் 700 இற்கும் மேற்பட்ட காணித் துண்டுகள் அரச ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் தற்போது மேலும் 219 பேருக்கு காணித்துண்டுகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கான பயனாளிகள் தெரிவுப் பட்டியல் வவுனியா பிரதேச செயலகத்தால் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

அது தொடர்பான முறைப்பாடுகள் இருக்கும் பட்சத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன் தெரியப்படுத்துமாறு பிரதேச செயலாளரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த திட்டத்தில் அரச ஊழியர்களிடம் பகிரங்கமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டதா எனவும் தகுதியானவர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதா என்ற விடயம் தொடர்பில் அறிவதற்காக தனி நபர் ஒருவர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக தகவல்களை கோரியுள்ளார்.

குறித்த விண்ணப்பத்தில் பயனாளிகளை தெரிவு செய்வதற்காக விண்ணப்பம் கோரப்பட்ட முறை? விண்ணப்பம் விளம்பரப்படுத்தியமைக்கான சான்று, விண்ணப்பம் கோரிய காலப்பகுதி, கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்த தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக கோரப்பட்டுள்ளது. (4-6-299)



யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.
(படம் - சிவசாந்தன்,கஜந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 240 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 340 | 350 | 350 |
| தக்காளி | 80 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 100 | 180 | 200 | 220 |
| பூசணி | 60 | 80 | 60 | 80 |
| புடோல் | 200 | 200 | 140 | 200 |
| வாழைக்காய் | 180 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 130 | 140 |
| பாகற்காய் | 450 | 400 | 450 | 500 |
| வெண்டக்காய் | 320 | 250 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 250 | 300 | 300 |
| லீக்ஸ் | 280 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 180 | 240 |
| கறிமிளகாய் | 350 | 350 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 2000 | 1600 | 1400 | 2000 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 280 | 150 | 200 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 180 | 150 | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 350 | 300 | 300 | 200 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 120 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 25 | 40 | 80 |
| ஈரப்பலா | 100 | 140 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றுமதியில்...

சரக்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இந்த மாதத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகளில் 12 சதவீதமான வருவாய் தேயிலை மூலம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வயோதிபப்...

கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 62 வயதான சரோஜாதேவி என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,30)

## பாணின் விலை...

தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கு அரசாங்கத்தின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும், பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை குறைத்தால் மட்டுமே தற்போது முடங்கியுள்ள வெதுப்பக தொழிலை மீட்டெடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

மின் கட்டண உயர்வால், வெதுப்பக தொழிலில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, வெதுப்பக தொழில் நலிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும், இந்த தொழிலை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதால் இந்த சுமைகளை வெதுப்பக உரிமையாளர்களுக்கு தாங்கிக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வெதுப்பக தொழிலை பாதிக்கும் பல்வேறு காரணிகளால் 7000 வெதுப்பகங்களில் சுமார் 5000க்கும் அதிகமானவை மூடப்பட்டுள்ளதாக ஜயவர்த்தன கூறினார். (ம-7)

## அந்நிய...

நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையில், அத்தியாவசியப் பொருட்களுக்கு அந்நியச் செலாவணி தட்டுப்பாடு இல்லை. எண்ணெய், எரிவாயு, நிலக்கரி, அத்தியாவசிய மருந்துகள் என அனைத்துப் பொருட்களுக்கும் தேவையான அந்நிய செலாவணியை தற்போது மத்திய வங்கி வழங்குவதில்லை என்றார்.

வங்கி முறை மூலமாகவே தற்போது வழங்கப்படுகின்றது மற்றும் அதன் வைப்புத் தொகை இப்போது சுமார் 600 மில்லியனாக அதிகரித்துள்ளது என்றார். (ம-7)

## உணவுப் பொருட்...

வித்துள்ளார்.

இதன்படி, உருளைக்கிழங்கு, வெங்காயம், பருப்பு, சீனி உள்ளிட்ட சில அத்தியாவசியப் பொருட்களின் மொத்த விலைகள் 07 வீதத்தால் குறைந்துள்ளன.

ரூபாயின் பெறுமதி மேலும் வலுவடையும் பட்சத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் வீழ்ச்சியடையலாம் என சங்கம் தெரிவித்துள்ளது.

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வலுவடைந்து வருவதையடுத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மொத்த விலை குறைந்துள்ளதாக அந்தச் சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

## இலங்கையை...

தலைவர் சஜித் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் இராஜதந்திரியும் புத்திஜீவியுமான கோபால் சுவாமி பார்த்தசாரதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

சைப்ரஸ், அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான இந்திய உயர்ஸ்தானிகராக அவர் கடமையாற்றிருந்தார்.

பிரதமர் ராஜிவ் காந்தியின் உத்தியோகபூர்வ தொடர்பாளராக இருந்ததோடு, பிரதமரின் ஊடகப் பேச்சாளராகவும் பணியாற்றியவராவார்.

அக்காலப்பகுதியில் அவர் இலங்கைக்கு பல தடவைகள் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இலங்கையை மீளக் கட்டியெழுப்ப இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலவும் நீண்டகால மற்றும் வலுவான இரு தரப்பு உறவுகள் குறித்தும் அவர் இங்கு நினைவுகூர்ந்தார். (ம-7)

## தேர்தல்...

வதற்குத் தேவையான பணத்தை பெறுவதே கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாகும் எனவும், பணம் வழங்குவதில் சிக்கல்கள் இருப்பதாக கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டால், உயர் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நிதியமைச்சின் செயலாளர், பொலிஸ் மா அதிபர், பிரதம அச்சகர், எரிசக்தி அமைச்சின் செயலாளர், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் உள்ளிட்ட பல அதிகாரிகளுக்கு இந்த கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் மார்ச் மாதம் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை எனவும், தேர்தலை நடத்துவதற்கான தடைகளை இன்று நடைபெறும் கலந்துரையாடலில் தீர்க்கப்பட்டால் தேர்தல் திகதியை எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் எனவும் புஞ்சிஹேவா மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## தேர்தலுக்கு நிதி...

கொடுத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், நாட்டின் வருமானத்துக்கு அமைய செலவு ஒழுங்குவரிசை ஒன்றை அமைத்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இவ்வாறான நிலையில் செலவு செய்யும் ஒழுங்குவரிசையை மாற்ற வேண்டி ஏற்பட்டால் பொருளாதார முகாமைத்துவம் செய்வதில் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது.

நாட்டில் இந்த வருடத்துக்கு செலவிட வேண்டிய அனுமதிக்கப்பட்ட பலவிடயங்கள் பாரியளவில் புத்தகத்தில் இருக்கின்றன என்றாலும் எமது மறை பொருளாதாரத்தில், செலவிடுவதில் ஒழுங்குவரிசை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு செலவழித்து வருவதாலே மக்கள் கடந்த காலங்களில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்ள இருந்து வந்த வரியையே இல்லாமலாக்கி இருக்கிறோம். ஆனால் தற்போது நாங்கள் பின்பற்றிவரும் செலவிடும் இந்த ஒழுங்குவரிசையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டி ஏற்பட்டால்.

மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள், விவசாயிகளுக்கு தேவையான உரம் மற்றும் ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கு செலவிடுவதில் சிக்கல் ஏற்படும்.

அத்துடன் இந்த மாதத்தில் சமுர்த்தி கொடுப்பனவு, பாடசாலை அச்சுப் புத்தகம் அச்சிடுதல், நெல் கொள்வனவு, அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் செலுத்துதல் போன்ற விடயங்களுக்கு தலா ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவிட வேண்டி இருக்கிறது. அதேபோல் உரம் கொள்வனவு செய்வதற்கு செலவிட வேண்டி இருக்கிறது.

50 மில்லியனுக்கு அதிகம் செலவிட வேண்டிய பொருட்களுக்கு திறைசேரி பிணைமுறி மூலம் வழங்கி வருகிறோம். இவ்வாறே எமது செலவு நடவடிக்கைகளை தற்போது முகாமைத்துவம் செய்து வருகிறோம்.

இந்நிலையில் இந்த செலவு ஒழுங்குவரிசையில் மாற்றம் ஏற்பட்டால் பாரிய பிரச்சினைகளுக்கு நாம் முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என்றார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1506
ரிஷபம் 1 0 4 9 0 9

தன நிதானய
திகதி - 2023.03.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1081
I 18 19 25 72

கொவிசெத
திகதி 2023.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 3293
P 04 48 63 64

மெகா பவர்
திகதி 06/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1399
B 03 02 21 44 54

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 360
மீனம் 08 18 19 36 மீனம்

மஹஜன சம்பத
திகதி 2023/03/06
சீட்டிழுப்பு இலக்கம் 5051
B 6 1 2 1 5 1

அத கோடிபதி
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1852
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.03.06
ரூ. 2,665,900/-
09 65 68 75 V

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1902
சீட்டிழுப்பு திகதி 2023-03-06
15 32 44 48 Y
ரூ. 40,616,228.80
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

W 19 10 27 28 49
1202
2023.03.06
திங்கட்கிழமை
ரூ. 311,160,028.20

ராசி
ரூ. 2,176,010/-
2023-03-06
3738
மஞ்சள்
03 10 35 50
ரூ. 5,957,860/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.06
சீட்டிழுப்பு இல : 4187
ரூ. 3,596,640/-
11 27 53 65 W

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2026
சீட்டிழுப்பு திகதி 2023.03.06
திங்கட்கிழமை
F 04 22 23 44
ரூ. 2,297,300/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மதித்து விரைவாக தேர்தலை நடத்த வேண்டும்

## ஜே.வி.பி வலியுறுத்து

நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினை மதித்து விரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த வேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்காக முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகளை முறியடிப்பதும் ஆணைக்குழுவின் தவிர்க்க முடியாத கடமையாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் 20ஆம் திகதியுடன் உள்ளூராட்சிமன்றங்களின் ஆயுட்காலம் நிறைவடைகிறது. அதனை மீண்டும் நீடிக்க முடியாது.

அவ்வாறெனில் உள்ளூராட்சிமன்றங்களுக்கான தலைவர்களோ அல்லது உறுப்பினர்களோ காணப்பட மாட்டார்கள். இது வடக்கு மக்களுக்கு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும்.

நீதிமன்ற தீர்ப்புடன் தேர்தலை நடத்துவதில் காணப்பட்ட பாரதூரமான தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது. எனவே தொடர்ந்தும் தேர்தலுக்கான நிதியை திறைசேரி செயலாளரினால் விடுவிக்காமலிருக்க முடியாது.

தேர்தல் தொடர்பான இறையாண்மை பலத்தை சவாலுக்குட்படுத்த முடியாது என்பது நீதிமன்ற தீர்ப்பில் தெளிவாகியுள்ளது.

ஆனால் நீதிமன்றம் இவ்வாறான தீர்ப்பினை வழங்கியுள்ள போதிலும், தேர்தலை நடத்தாமலிருப்பதற்கான முயற்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கைவிடவில்லை.

தேர்தலுக்கு அஞ்சுகின்றமையின் காரணமாகவே அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர். தற்போதைய அரசாங்கத்திற்கும், ராஜபக்ஷ அரசாங்கத்திற்கும் மக்கள் ஆணை கிடையாது என்பது தெளிவாகியுள்ளது.

தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு இந்த அரசாங்கமும், ஜனாதிபதியும் மேலும் பல சூழ்ச்சிகளில் ஈடுபடக் கூடும்.

திறைசேரி மற்றும் அரச அச்சகம் என்பவற்றுக்கு தேர்தலுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என்று நீதிமன்ற தீர்ப்பில் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இனியும் தேர்தல் ஆணைக்குழு இவர்களுடன் பேசுவதற்கு எதுவும் இல்லை.

எனவே ஆணைக்குழு கூடி தேர்தலை நடத்தக் கூடிய, மிக அருகிலுள்ள தினத்தை அறிவிக்க வேண்டும். அதனை விடுத்து தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான சதித் திட்டத்திற்கு இடமளித்து விடக் கூடாது என்றார். (ம-7)

# பேருந்து கட்டணங்களில் எதிர்வரும் மாதம் திருத்தம்

எதிர்வரும் மாதத்திலோ அல்லது அதற்கு முன்னதாகவோ பேருந்து கட்டணச் சலுகைகளை மக்களுக்கு வழங்க முடியும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நாட்களில் இடம்பெறும் தேர்தல் பேரணிகள் காரணமாக பேருந்து தொழிற்துறைக்கு சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-7)

# தேர்தல் நடை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் திறைசேரி தேர்தலுக்கான நிதியை உடனடியாக விடுவித்தாலும், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 5 முதல் 7 வாரங்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டும். எனவே, 2023 ஏப்ரல் இரண்டாம் பாதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்தன, தேர்தல்களை நடத்துவதற்கு போதிய நிதியை வழங்குவதாக உறுதியளித்தால், இன்று காலை தேர்தல் ஆணைக் குழுவில் நடைபெறவுள்ள கூட்டத்தில், தேர்தலுக்கான குறுகிய திகதியை அறிவிக்க தேர்தல் ஆணைக்குழு தயாராக இருப்பதாக புஞ்சிஹேவ தெரிவித்தார்.

"தேர்தல் ஆணைக் குழுவால் உள்ளூராட்சி தேர்தலை நடத்த முடியுமா இல்லையா என, என்னால் உத்தரவாதம் அளிக்க முடியாது. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு போதுமான நிதி கிடைப்பதைப் பொறுத்தது. இன்றைய கலந்துரையாடலில் போதிய நிதியை வெளியிடுவதற்கு திறைசேரி பொறுப்பேற்றால், உள்ளூராட்சித் தேர்தலை அருகில் உள்ள நாளில் நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். பந்து திறைசேரியின் கைகளில் உள்ளது" என்று புஞ்சிஹேவ வலியுறுத்தினார்.

"இருப்பினும், தேர்தலுக்கு நிதியை விடுவிப்பதில் தாமும் ஆர்வமாக இருப்பதாகவும், ஆனால் தற்போது அவ்வாறு செய்வதற்கு போதுமான பணம் இல்லையென திறைசேரி கூறலாம். அவர்களால் சில மாதங்களில் மட்டுமே நிதியை விடுவிக்க முடியும்" என கூறலாம். ஆனால், விவாதத்தில் இன்று இந்த மாதிரியான சூழல் உருவாகும் என்று நான் நினைக்கவில்லை" என்று அவர் மேலும் கூறினார்.

உள்ளூராட்சி தேர்தலுக்கான நிதியை உடனடியாக பெறாவிட்டால், தேர்தல் ஆணைக்குழு மற்றொரு சட்ட சிக்கலை எதிர்கொள்ளும்.

தேர்தல்கள் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியைத் தக்கவைக்க வேண்டாம் என்று திறைசேரிச் செயலாளருக்கு நாட்டின் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, திறைசேரி அதிகாரப்பூர்வமாகவும் சட்டபூர்வமாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நிதியை விடுவிக்கக் கடமைப்பட்டுள்ளது. இல்லை என்றால் அது நீதிமன்ற அவமதிப்பாகும். தேர்தல் ஆணைக்குழு மற்றொரு சட்டப் போராட்டத்தில் ஈடுபட விரும்பவில்லை.

திறைசேரி உடனடியாக நிதியை விடுவிப்பதாக உறுதியளித்தால், தேர்தல் நடைபெறும் நாளைக் குறிக்கும் வர்த்தமானி அறிவிப்பை 25 மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மூலம் புதன்கிழமை மற்றும் வியாழனில் வெளியிட தேர்தல் ஆணைக்குழு முயற்சி செய்யும் என்றார். (ம-7)

# மரை இறைச்சியை கடத்தி வரவில்லை

## சம்பந்தப்பட்டவர் தெளிவுபடுத்தினார்

(யாழ்ப்பாணம்)

மரை இறைச்சி கடத்தியவர் ஊர்காவற்துறை பொலிஸாரால் கைது என நேற்று வெளியான செய்தியில், மேற்படி சம்பவமானது சம்பந்தப்பட்டவரின் வீட்டின் குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்த இறைச்சியையே பொலிஸார் கைப்பற்றினர் என்றும்

குறித்த இறைச்சி யாழ்ப்பாணப் பகுதியில் விற்கப்பட்ட போது வாங்கப்பட்டதாகவும் கிளிநொச்சியில் இருந்து அந்த இறைச்சியை தாம் கடத்தவோ அல்லது அந்த இறைச்சியை கொண்டு வரும் போது பொலிஸார் பறிமுதல் செய்யவோ இல்லை என்றும் சம்பந்தப்பட்டவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


யா/ இணுவில் மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வருடாந்தப் பொதுக்கூட்டமும்
நிர்வாக சபைத் தெரிவும்

காலம் - 19.03.2023 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் - காலை 10.00 மணி
குறிப்பு - புதிதாக அங்கத்தவராக இணைய விரும்பும் பழைய மாணவர்கள் அன்றைய தினம் சமூகந்தரவும்.

தலைவர்
செயலாளர்
(14813)

BEACON STUDY CENTRE
வதிரி கரவெட்டி
A/L DAY CLASS
கணித உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம் : 08.03.2023 புதன்கிழமை
நேரம் : காலை 8.30 மணி
PHYSICS - திரு.G.பிரபா
வழமையான ஆசிரியர்கள்
நிர்வாகம்
(C-6110)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14814)
076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்பு காணி விற்பனைக்கு
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
(14817)
074 318 7263
076 755 8606
076 436 5814

உடனடி வேலை வாய்ப்புக்கள்
EXECUTIVE OFFICER

✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (திறமைக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)
(C-6111)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
(C-6111)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

மணமகள் தேவை
இனம் : இந்து கௌரவ குடும்பம்
பிறந்த ஆண்டு : 1989
கிரக பாவம் : 22
தொழில் : உப தபாலதிபர்
எதிர்பார்ப்பு :
ஆசிரியர் விரும்பத்தக்கது அல்லது அரச திணைக்கள உத்தியோகத்தர் அத்துடன் வடமராட்சிக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்
(14816)
077 864 9878
077 126 0182


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.